[26th September 1961

SRI M. D. THIAGARAJA PILLAI : இப்பொழுது தெரிவிக்கப்பட்ட குறைகளை நீக்க, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு விற்பனை செய்ய அனுமதி கொடுத்தால், நலமாக இருக்கும். அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பது பற்றிய தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கலப்படத்தைத் தடுப்பதில் வெற்றி காண வேண்டுமானால், வினியோக முறையை மாற்ற வேண்டும். வினியோகஸ்தர்களை நியமிப்பதில், சிமெண்ட் கம்பெனிக்காரர்களையே நியமித்தால், தொடர்ந்து இம்மாதிரியேதான் நடக்கும். ஆகவே, அரசாங்கம், கூட்டுறவு ஸ்தாபனங்களை வினியோகஸ்தர்களாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI S. M. ANNAMALAI : சிமெண்ட்டில் கலப்படம் செய்வதற்குப் பதிலாக, சிமெண்ட் மூட்டையை தூக்கிப்போடும்போது இரண்டு படி செமண்ட் கீழே கிடைக்கிறது. அதை அவர்களே உபயோகிக்கிறார்கள். ஆகவே, மூட்டையில் சிமெண்ட் அளவில் குறையாமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அளவு குறையக் கூடாது என்பதுதான் சர்க்காரின் எண்ணமும். அப்படிக் கீழே மூட்டைகள் விழும்போது சிமெண்ட் குறைந்தால், அதில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

SRI V. SUBBIAH : சிமெண்டு ஒரு மூட்டை, இரண்டு மூட்டை வேண்டுமென்பவர்கள் இன்றைக்கு ரூ. 14 வீதம் கொடுத்துக் கள்ள மார்க்கெட்டில்வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்க, தாசில்தார்கள் லைசென்சுகளை வழங்குவதற்குப் பதிலாக, கிராமப் பஞ்சாயத்துக்களில், கிராமத்திற்கு வேண்டிய சிமெண்டுகளை அளிக்க . . .

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Tax on railway passenger fares (merger with railway fares)

*1842 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரயில்வே டிக்கட் கட்டணத்துடன் பிரயாணவரி இணைப்பு செய்ததால் நம் மாநிலத்தின் வருவாய் குறையுமென்று மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் ஆட்சேபணை தெரிவித்துள்ளார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்த டிக்கட் கட்டணத்துடன் பிரயாண வரியைச் சேர்ப்பது பற்றி, மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை ஆலோசனை கேட்டார்களா ? அது விஷயமாக மாநில சர்க்கார் பரிசீலனை செய்தார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை, இந்த சர்க்காரை கலந்தாலோசிக்கவில்லை.

Flood Relief Fund

*1843 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount which has been donated so far to Sri Kamaraj Flood Relief Fund?

26th September 1961]

The Hon. Sri C. SUBRAMANIAM: The total donations received from the generous public for flood relief measures for the period 10th July to 26th August 1961 is Rs. 5,41,176·33. Donations are being received even now.

Sri K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில், " காமராஜ் வெள்ள நிவாரண நிதி " என்று இருக்கிறது ; அது " சீப் மினிஸ்டர் வெள்ள நிவாரண நிதி " என்று இருக்கவேண்டுமல்லவா? அல்லது காவேரி வெள்ள நிவாரண நிதியா, காமராஜ் வெள்ள நிவாரணமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: கேள்வியை அந்தமாதிரிப்போட்டிருக்கிறார்கள். " சீப் மினிஸ்டர் ரிலீப் பண்ட் " என்றுதான் இருக்க வேண்டும்.

Five-Year Plan (Katha-Kalakshepams)

*1844 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி கதா காலக்ஷேபம் செய்ய திட்டமுள்ளதா ? விவரமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM: ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றி கதா காலக்ஷேபம் மூலம் மக்களிடை எடுத்துச் சொல்லும் திட்டம் ஏற்கனவே கடந்த நான்காண்டு காலமாக, இந்த ராஜ்யத்தில் நடைமுறையில் இருந்து வருகின்றது. திட்டத்தைப்பற்றி மக்களிடை எடுத்துக்கூறி அவர்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற திட்டப் பிரசார நாடகங்கள், கதா காலட்சேபம், வில்லுப்பாட்டு இவைகள் மூலம் மதுரை செங்கல்பட்டு, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் விளம்பரத் திட்டத்தின்கீழ்(Integrated Field Publicity Scheme) ஆண்டுதோறும் முக்கியமாக கிராமங்களில் மாவட்ட விளம்பர அதிகாரிகளால் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டுதோறும் ரூ. 20,000 ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதில் கதா காலட்சேபத்திற்கும், வில்லுப்பாட்டிற்கும் ரூ. 3,000 மட்டுமே செலவிடப்படுகின்றது. அரசாங்கம் வெளியிட்ட நாடகங்களையும், பாட்டுக்களையும் அந்தந்த மாவட்டத்திலுள்ள நாடகக் குழுவினர், கலைஞர்களைக் கொண்டு நடத்தி வருகின்றனர்.

இப்படி நடத்தப்பட்ட நாடகங்கள், கதா காலட்சேபங்கள், வில்லுப் பாட்டுகள் முதலியவை பெரும்பான்மை மக்களைக் கவர்ந்து அவர்கள் பாராட்டுதலைப் பெற்றதுடன் மட்டுமன்றி, ஐந்தாண்டுத் திட்டங்களையும், அதன் நடவடிக்கைகளையும் எளிதில் புரிந்து கொள்ளவும் வழி ஏற்பட்டுள்ளது.

Sri V. K. KOTHANDARAMAN: ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிக் கதா காலட்சேபம் செய்யக் கூடியவர்களுக்கு ஒரு நாளைக்குக் காலட்சேபம் செய்ய எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ? அதே நேரத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிக் கதா காலட்சேபம் என்று சொல்லிவிட்டு, காங்கிரஸ் இயக்கத்தைப்பற்றி பிரசாரம் செய்வதற்கான மறைமுக ஏற்பாடாக இதை வைத்திருப்பது நியாயமா, முறையா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: நாடகம் நடத்துவதற்கு ரூ. 250 கொடுக்கப்படுகிறது. கதாகாலட்சேபம் நடத்துவதற்கும், வில்லுப்பாட்டு பாடுவதற்கும் ரூ. 30 முதல் ரூ. 50 வரை கொடுக்கப்படுகிறது.

எந்த சர்க்காராக இருந்தாலும் ஒரு திட்டம் போட்டுத்தான் நடத்த வேண்டும். அதுமாதிரிதான் ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்குப் பிரசாரம் செய்யவேண்டியிருக்கும்போது, அதைக்